பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 26 திங்கட்கிழமை 10.01.2022 கதிர் 66

### இது ரகசியம் அல்ல!

பிரதமர் மோடிக்கு அனுப்பும் கடிதம் தொடர்பில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சித் தலைவர்கள் எல்லாம் இணக்கம் கண்டு, ஒப்பமிட்டு, மூன்று, நான்கு நாள்கள் கடந்து விட்டன. இன்னும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாதான் பக்கம்02

# அரசுக்கு எதிரான எழுச்சிக்கு தலைமை தாங்க நாம் தயார்




## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

(இ.கலையமுதன்)

அரசுக்கு எதிரான பொதுமக்களின் அதிருப்தி தீவிரமடைவதால் இந்த அரசுக்கு எதிரான அரசியல் எழுச்சிக்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமன சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## சீனா எமது உயிர்த் தோழன்

### இப்படிக் கூறுகின்றார் மஹிந்த



சீனா எமது உயிர்த் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம் மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே இராஜதந்திர உறவு ஏற்படுத்தப்பட்டு 65 ஆண்டு பூர்த்தி மற்றும் புகழ்பெற்ற இறப்பர் அரிசி ஒப்பந்தத்துக்கு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமையை முன்னிட்டு சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்க் யீ யின் பங்கேற்புடன் கொழும்புத் துறைமுக நகரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் 09

## சீனாவின் ஒத்துழைப்பு இலங்கைக்குத் தொடரும்

### கோட்டாவிடம் வாங் யீ உறுதி



சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 65 வருடகால இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில், சீன மக்கள் குடியரசின் வெளிவிவகார அமைச்சரும் அரச ஆலோசனைச் சபையின் 09

## பின்பக்கமாகச் செலுத்தப்பட்ட டிப்பருக்குள் சிக்கி ஒருவர் பலி



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து டிப்பர் வாகனத்தின் சாரதியைக் 2

## சகல உள்ளூராட்சி சபைகளின் பதவி காலமும் 1 வருடம் நீடிப்பு!

### அடுத்த வாரத்தில் வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 10

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள்வெளியாகியுள்ளன.

அதற்கமைய தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்படும்.

இன்றைய நிலையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடுவதானால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி 09

## இன்று முதல் நாளாந்த மின்வெட்டுக்கு அனுமதி

நாட்டில் இன்று முதல் நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இலங்கை பொதுப்பயன்பாட்டுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடுமுழுவதும்மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு நேர்ந்துள்ளது எனவும், அதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறும் இலங்கை மின்சார சபை, பொது பயன்பாட்டு 09

## இ.தொ.கா. செயற்பாட்டாளர்கள் திகாம்பரம் அணியுடன் சங்கமம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாட்டாளர்கள் சிலர் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்துள்ளனர்.

சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்தை நேற்று நேரில் சந்தித்து அவர்கள் இணைந்து கொண்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உடபுஸ் ஸலாவ, இராகலை, வலப்பனை போன்ற பகுதிகளில் உள்ள அங்கத்தவர்கள் சிலரே இவ்வாறு திகா அணியுடன் சங்கமித்துள்ளனர்.



## யாழில் வாள்வெட்டு; சந்தேகநபர் கைது!

கோப்பாய் மற்றும் கொக்குவில் பகுதிகளில் உள்ள இருவேறு வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 26 வயதுடைய கொலின் என்ற சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர் .

சந்தேகநபரிட 2

## ஹெரோயினுடன் சென்ற இரு தம்பதியினர் வவுனியாவில் குழந்தைகளுடன் சிக்கினர்!

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரற்பெரியகுளம் பகுதியில் 63 கிராம் கெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த நான்கு பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த காரை வவுனியா, ஈரற்பெரியகுளம் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸார் வழிமறித்து அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த காரில் 63.84 கிராம் கெரோயின் போதைப்பொருள் இருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த சம்பவத்தில் காரில் பயணித்த தம்பதிகளான இரு பெண்கள் மற்றும் இரண்டு ஆண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். 09

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பமிடவில்லை. ஏனைய தலைவர்கள் ஒப்பமிட்ட கடிதம் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் வசம்தான் உள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து இன்று கொழும்புபுறப்படும்மாவைசேனாதிராசா கொழும்பில் சம்பந்தனைச் சந்தித்து, இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டதும், அதனை இந்தியப் பிரதமரிடம் ஒப்படைப்பதற்காக, கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவரிடம் கையளிப்பதற்கு சம்பந்தன் நடவடிக்கை எடுப்பார்.

கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும், சுமந்திரனையும் – இயலுமானால் அக்கடிதத்தில் ஒப்பமிட்ட பிற தலைவர்களான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா ஆகியோரையும் – கூட்டிக் கொண்டு போய்த்தான் இக் கடிதத்தை இந்தியத் தூதுவரிடம் சம்பந்தன் ஒப்படைப்பார் எனத் தெரிகின்றது.

இன்னும் ஒரு விடயமும் இதில் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றது. இந்த ஆவணத்தில் தமிழ்த் தலைவர்கள் ஒப்பமிட்டு மூன்று, நான்கு நாள்கள் ஆகி விட்டன. அது குறித்து சம்பந்தனோ, சுமந்திரனோ இன்னும் ஊடகங்களுக்கு வாய் திறக்கவேயில்லை. ஏன் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன், என்.ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிறேமச்சந்திரன், சித்தார்த்தன் போன்றோரும் கூட ஒரு வித மௌனம் காப்பவர்கள் போலவே நடந்து கொள்கின்றனர். இந்தத் தமிழ்க் கட்சிகளின் ஒன்று கூடலுக்கு உழைத்த ரெலோ தரப்பில் இருந்து மட்டும்தான் ஓரிரு செய்திகள், அறிவிப்புகள் வந்தன. இந்த ஆவணத்தில் தாங்கள் ஒப்பமிடாத காரணத்தால் ஏதோ தங்கள் மீது அபவாதம் வந்து விடுமோ என் றெண்ணியோ என்னவோ மனோ கணேசன்தான் ஊடகங்களுடன் இவ்விடயம் குறித்து அதிகம் பேசுகின்றார். அதுவும் புரிந்து கொள்ளத் தக்கதே.

எனினும், 'மலையைக் கெல்லி எலியைப்பிடித்தகதையாக' பல கூட்டங்களை, பல்வேறு இடங்களில் நடத்தி, பல தரப்புகளுடன் பல சுற்று மரதன் பேச்சுக்களை நடத்தி, எட்ட முடியாத சிகரத்தை எட்டியது போல தயாரிக்கப்பட்டு, இறுதி செய்யப்பட்ட ஆவணம் இது. அதில் ஒப்பமிடும் முடிவு கூட திடுதிப்பெனத்தான் எடுக்கப்பட்டது.

அந்த ஆவணம் குறித்து தமிழ்க் கட்சிகள் அதிகம் பிரபலாபிக்காமல் மௌனம் காப்பதில் ஏதேனும் சூத்திரம் பொதிந்திருக்கக் கூடும். பார்ப்போம், என்ன வெளிவருகின்றது என்று.

★ ★ ★

வரும் 18ஆம் திகதி முக்கிய தினம்.

இடைநிறுத்தப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி அன்றைய தினம்தான் ஆரம்பித்து வைத்து, அங்கு தமது சம்பிரதாயபூர்வ உரையை நிகழ்த்த விருக்கின்றார்.

சர்வதேசத் தரப்புகளுக்கான ஐம்பது கோடி அமெரிக்க டொலர் கடனை நாடு திரும்பச் செலுத்த வேண்டிய நாளும் அன்றுதான்.

இதற்கிடையில் தினசரி இரண்டரை மணி நேர மின்வெட்டு என்ற பகீர் தகவலும் வெளியாகியிருக்கின்றது. மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்யக் கூட போதிய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்பதால் இந்த மின்வெட்டு என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகிவிட்டன.

இதற்குள் அமைச்சரவை மாற்றம் என்ற இழுபறியும் நிலுவையில் உள்ளது.

– இப்படி பல பிய்ச்சல், பிடுங்கலுக்கு மத்தியில்தான் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்ற வேண்டியவராக இருக்கின்றார் ஜனாதிபதி. இந்த நெருக்கடிகளுக்கு தமது உரையில் பதில் சொல்ல வேண்டிய இக்கட்டு அவருக்கு உண்டு.

இதில்தான் ராஜபக்ஷக்களின் தந்திரத்தை அவரும் செய்ய முனைகின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன.

கடந்த மூன்றாம் திகதி இந்த வருடத்துக்கான முதல் அமைச்சரைக் கூட்டம் நடைபெற்றமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கிடப்பதால் அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் நெருக்குவாரங்களைத் தரும் சில முடிவுகளை அரசு எடுத்து அறிவிக்கும், அது தவிர்க்க முடியாதது என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் ராஜபக்ஷக்களின் தந்திரம் வேறு விதமாக இருந்தது.

மிக வசதியான பொருளாதாரத்தில் இருக்கும் நாடு தனது பிரஜைகளுக்கு புத்தாண்டுப் பரிசாக பல சலுகைகள், வெகுமதிகளை அறிவிப்பது போல பல சலுகைத் திட்டங்களை அந்த அமைச்சரவை முடிவில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

அதேபோன்ற பரபரப்பு அறிவிப்பை 18ஆம் திகதி ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரையில் எதிர்பார்க்கலாம் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

சர்வதேச கடன் கொடுப்பனவுகளை – ஐம்பது கோடி டொலர்களை – செலுத்தியமையை உறுதிப்படுத்தும் அறிவிப்பு, போதிய எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணி ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பது பற்றிய பிரகடனம், மின்வெட்டு தொடராது என்ற உறுதிப்படுத்தல்... இப்படி இன்னோரன்ன அறிவிப்புகள் – முக்கிய சிக்கல்களை வெற்றிகரமாக முகம் கொடுத்து, எதிர்கொண்டு சமாளித்தமை பற்றிய தகவல்கள் – ஜனாதிபதியின் உரையில் சாதனையாக நிலை நிறுத்தப்படும்.

ஆனால், உண்மையில் இப்போது ஜனவரி 18ஆம் திகதி செலுத்த வேண்டிய சர்வதேசக் கடன் கடப்பாடு போல பத்து மடங்கு அதிக தொகை ஜூலையில் செலுத்த வேண்டியிருக்கின்றது.

இப்போது சமாளித்தாலும், அப்போது என்ன செய்யும் கோட்டா அரசு? கடன் கடப்பாட்டை நிறைவு செய்ய முடியாமல் கையை விரித்து சர்வதேச சமூகத்துக்கு பெப்பேதான் காட்ட முடியும்.

– மின்னல் –

## அரசுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் பொதுக் கொள்கையுடன் செயற்பட எந்தக் கட்சியும் முன்வரலாம். மேலும் தற்போதைய ஜனாதிபதி போராட்ட அரசியலையே மேற்கொண்டு வருகின்றார். நான் பௌத்தனாகவுள்ளேன். ஆனால், மத வேறுபாடு, இனவேறுபாடு காட்டாமல் எல்லோரையும் இலங்கையர்களாகவே பார்க்க வேண்டும். இதனையே ஜனாதிபதியும் செய்ய வேண்டும்.

நமது ஆட்சியில் வீட்டுத் திட்டங்களை வழங்கியிருந்தோம். ஆனாலும், கூட தற்போது வந்த அரசு அந்த வீட்டுத் திட்டங்களுக்கான நிதிகளை வழங்காமல் மக்களிடம் விளையாட்டுக்களைக் காட்டி வருகின்றது.

வடக்கு, கிழக்கு சார்ந்த பகுதிகளில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக நாங்கள் வந்து இருக்கின்றோம். அந்தவகையில் இன்று நாம் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களைச் சந்திக்கின்றோம். இது மிகவும் மகிழ்ச்சியானது. ஆனால், தற்போது நாட்டில் ஊடகத்துறைக்கு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

ஆளும் தரப்பின் அமைச்சர்கள் தற்போது நீக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வெளியே விடப்படும் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாற்று சக்தியாக உருவாகுவதற்குச் சாத்திய மில்லை.

மைத்திரிபால சிறிசேன தற்போது வரை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற நபர். அவ்வாறான ஒருவர் எதிர்த்தரப்பின் பொது வேட்பாளராக வருவதற்குச் சாத்திய மில்லை.

2023ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்படும். ஆயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இல்லாத பொதுவேட்பாளரை நிறுத்தும் ஆதரிக்கும் எண்ணம் எமது கட்சிக்கு இல்லை. அரசுக்கு எதிரான பொதுமக்களின் அதிருப்தி தீவிரமடைவதால் இந்த அரசுக்கு எதிரான அரசியல் எழுச்சிக்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது – என்றார்.

## பின்பக்கமாகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தளாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது எனக் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், பேராறு பகுதியைச் சேர்ந்த சாஹூல் ஹமீட் (வயது 76) வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், கந்தளாய், பேராறு பகுதியில் தனது காணிக்குள் மண் இட்டு செப்பனிட்டு வந்துள்ளார்.

இவ்வேளையில், அவரது காணிக்குள் டிப்பர் வாகனம் களி மண்களைக் கொட்டுவதற்காகப் பின்பக்கமாகச் செலுத்திய வேளை குறித்த நபர் டிப்பருடன் மோதுண்டதால் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## யாழில் வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்து கூரிய ஆயுதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் கூறினர் .

கடந்த நவம்பர் 23ஆம் திகதி கோப்பாய் மற்றும் கொக்குவில் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டு வன்முறைக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுத் தப்பித்தது .

சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் மானிப்பாய் , புதுமடத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் .

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றங்களில் பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.




# மரண அறிவித்தல்



## அமரர்.திரு. நல்லையா தங்கவேல்

### ஓய்வு நிலை ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பிறப்பு - 04.01.1953 | இறப்பு - 09.01.2022

யாழ். நாரந்தனையை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.நல்லையா தங்கவேல் அவர்கள் 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நல்லையா அன்னலெட்சுமி (கண்ணம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிராசா வல்லவாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், சசிகலா ( ஓய்வு நிலை ஆசிரியை யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம் ) அவர்களின் அன்புக்கணவரும் சிவமைந்தனன், இரகுநந்தனன் ஆகியோரின் பாசமிகுதந்தையும் மகேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற, வசந்தானந்தன் மற்றும் நடேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10.01.2022 திங்கட்கிழமை மு.ப 9 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 1 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் – குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு 0777851910 (சிவமைந்தனன்)
0771022648 (இரகுநந்தனன்)

34/1,பரமேஸ்வரா வீதி, 4 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# நாட்டில் இனவாதத்தை விதைத்ததன் சாபத்தை அரசு இன்று அனுபவிக்கிறது




தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்திய அரசாங்கம் தற்போது அதன் மூலமே அழிந்து வருவகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த 'பிரபஞ்சம்' திட்டத்தின் கீழ் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்துக்கு கடந்த சனிக்கிழமை வகுப்பறைகளுக்கு டிஜிற்றல் கணினி திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை எதிர்க்கட்சித் தலைவரால் வழங்கி வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்திய அரசாங்கம் தற்போது அதன் மூலம் அழிந்து வருவகின்றது.

இனவாதம், இன பேதம், மதவாதத்தை விதைத்த தன் சாபத்தையே அரசாங்கம் இன்று அனுபவிக்கின்றது.

ஊட்டச்சத்து குறைபாடும் போசாக்கின்மையும் தலைவிரித்தாடும் நாட்டில் உள்ள குழந்தைகளின் இணைய வழி கல்விக்குத் தீர்வை வழங்க முடியாத அரசாங்கத்தால் ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு எவ்வாறு தீர்வை வழங்க முடியும்.

முன்னெப்போதையும் விட இந்த நாள்களில் தேசிய ஊட்டச்சத்து கொள்கையின் தேவை மிகவும் உணரப்பட்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் குறித்த கொள்கையின் தேவை நிறைவேற்றப்படும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## பிற்போடப்படுகிறது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் வாரம் வர்த்தமானி அறிவித்தல் வரும்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்கவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு, அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்கவால் வெளியிடப்பட வேண்டும்.

எனினும் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் அவரால் தேர்தலை பிற்போடுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் தேர்தலைப் பிற்போடுவதற்கான இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்கவின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி மற்றுமொரு அமைச்சுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மற்றுமொரு அமைச்சின் ஊடாக குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 700 சிகரெட் பெட்டிகளுடன் இலங்கையர் பாரிஸில் கைது

பிரான்ஸில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பாரிஸ் நகரில் முட்டை பெட்டியில் மறைத்து வைத்த 700 சிகரெட் பெட்டிகளுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் வாகனம் ஓட்டிச் சென்ற சாரதி ஒருவரை பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் இலங்கையர் எனத் தெரியவந்துள்ளதென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவர் பாரிஸில் உள்ள கறுப்பு சந்தைக்குச் செல்லும் வழியில் இவ்வாறு பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

ஸ்பெயினில் இருந்து கொண்டு வந்த சிகரெட் பெட்டிகளை பாரிஸ் கறுப்பு சந்தையில் விற்பனை செய்வதற்குத் திட்டமிட்டிருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த இலங்கையரின் முட்டை அட்டைப்பெட்டிக்குள் துப்பாக்கி தோட்டாக்களும் காணப்பட்டுள்ளன எனவும் அதனையும் மீட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர் அந்தப் பகுதி ஜோந்தாமினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சீனாவில் இருந்து மீண்டும் உரத்தை இறக்குவது குறித்து கலந்துரையாடல்!

*சீனாவிலிருந்து உரத்தை மீண்டும் கொண்டு வருவது தொடர்பான கலந்துரையாடல், உரச் செயலகத்தின் அதிகாரிகளுடன் இடம்பெறவுள்ளது.*

*அதன்படி, குறித்த கலந்துரையாடல் இன்று (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளதாக கொமர்ஷல் உர நிறுவனம் அறிவித்துள்ளது.*

*நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் மார்ச் மாதம் சீன உரத்தை ஏற்றிய கப்பலை நாட்டுக்குக்கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் மெத்சிறி விஜேகுணவர்தன ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார். மேற்படி கப்பலில் 8 ஆயிரம் மெற்றிக் டன் உரம் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*



## வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்!

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு - ஹொரணை பிரதான வீதியின் வாகன போக்குவரத்து கும்புக்க பகுதியில் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய வீதி ஒன்றை நிர்மாணித்துத் தருமாறு கோரி பிரதேசவாசிகளால் வீதி மறிக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு துறைமுக நகரின் உல்லாச நடைபாதை திறப்பு

கொழும்பு துறைமுக நகரத்தின் மரினா உல்லாச நடைபாதையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியும் பங்கேற்றார்.

முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வை அடுத்து புகைப்படக் கண்காட்சியொன்றையும் இலங்கைக்கான சீன தூதரகம், விளையாட்டு அமைச்சு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை, ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படும் உல்லாச நடைபாதை சில தினங்களுக்கு மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரில் உள்ள முகப்பின் ஊடாக இதற்குள் பிரவேசிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மனைவி கோடரித் தாக்கு; கணவர் பரிதாபமாக பலி!

மனைவியால் கோடரியால் தாக்கப்பட்டதில் ஆபத்தான நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருவிட்ட, கந்தலந்த பிரதேசத்தில் சனிக்கிழமை இரவு குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில், படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கந்தலந்த குருவிட்ட பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் மதுபோதையில் தனது மனைவியை தினமும் தாக்குபவர் எனவும், அந்த சந்தர்ப்பங்களில் மனைவி மற்றும் குழந்தைகள் அயல் வீட்டில் தஞ்சமடைகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சனிக்கிழமை இரவும் மதுபோதையில் கூரிய ஆயுதம் மற்றும் அமிலத்துடன் வீட்டுக்கு வந்த கணவன் மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதன்போது, கோடரி ஒன்றினால் கணவனை மனைவி தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் 31 வயதான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாழ்வக ஸ்தாபகர் அன்னலட்சுமியின் உதய நாளும் பரிசுத் தினமும் நாளை!

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியால் ஸ்தாபிக்கப்பட்ட வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத்தின் உதய நாளும் பரிசுத்தின நிகழ்வும் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 8.45 மணிக்கு வாழ்வகத்தில் உள்ள செல்வா மண்டபத்தில் நடைபெறும்.

வாழ்வகத்தின் தலைவரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளருமாகிய ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசெயலாளர் த.முகுந்தன், கோப்பாய் நவமங்கை நிர்வாக நிறுவுநர் சுவர்ணா நவரத்தினம், 'நாமிந்து யாழிந்து' நண்பர்கள் அமைப்பின் இணைப்பாளர் வே.கந்தசாமி ஆகியோரும் கௌரவ விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்வர்.

அன்னையின் ஆசியைப் பெற்று வாழ்வகக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வாழ்வக அன்னை துதி என்பன இடம்பெறும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் புகழ்பூத்த அதிபரும் வாழ்வகத்தின் நிர்வாகசபை உறுப்பினருமான பொ.கமலநாதனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் அரங்க நிகழ்வுகளில் ஆசியுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார். அதிதிகள் உரைகளைத் தொடர்ந்து யாழ்.இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் கௌரவிக்கப்படவுள்ளார். தொடர்ந்து பரிசில்கள் வழங்கலுடன் வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பண்பாட்டுப் படுகொலைத் தினம்

அந்நியரான ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 1948இலிருந்து – கடந்த சுமார் எழுபத்தியைந்து வருடங்களாக – இந்தத் தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பு – இனஒதுக்கல் – இனப்படுகொலை – நடவடிக்கைகள் அரச ஒடுக்கு முறையாகத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை உலகறிந்த பரகசியம்.

அந்த இனவழிப்பில் – இனச் சுத்திகரிப்பில் – இனப் படுகொலையில் – முக்கிய அங்கம் அல்லது கூறு பண்பாட்டுப் படுகொலையாகும்.

முள்ளிவாய்க்கால் கொடூரத்துடன் யுத்தம் முடிந்து 12 வருடங்கள் கடந்த பின்னரும், இனவழிப்பின் ஓர் அங்கமான பண்பாட்டுப் படுகொலை அல்லது பண்பாட்டுச் சிதைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் தமிழர் தேசம் எங்கும் சிங்களத்தால் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

தமிழர் தேசத்தின் மீதான சிங்களத்தின் பண்பாட்டுப் படுகொலை அல்லது கலாசார அழிப்பு நாச வேலையாகக் கணக்கெடுக்கப்படுபவற்றில் இரண்டு முக்கியமானவை.

ஒன்று – தமிழர்களின் மொழிச் சிறப்புக்காக பெரும் எழுச்சியுடன் நடத்தப்பட்ட உலகத் தமிழராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளுக்கு இடையே சிங்களத்தின் ஏவல் படை நடத்திய நாசகாரத் தாக்குதலில் பத்து அப்பாவித் தமிழ் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்.

அடுத்தது – தென்கிழக்காசியாவிலேயே அச்சமயம் மிகப் பெரிய புத்தகக் களஞ்சியமாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகம் சுமார் 94 ஆயிரம் புத்தகங்கள், ஓலைச் சுவடிகள், மீளவும் கிடைத்ததற்கரிய ஆவணங்கள், புகைப்படங்களுடன் சேர்த்துத் தீயிட்டு எரிக்கப்பட்டமை.

அந்தப் பண்பாட்டுப் படுகொலைக் கொடூரத்தில் ஒன்றான நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலைக் கொடூரத்தில் உயிரிழந்த ஒன்பது பேரின் 48 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

1974ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும், அதையொட்டிய பிற மையங்களிலும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உலகத் தமிழராய்ச்சி மாநாடு நடைபெற்றது.

அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிங்கள அரசின் துஷ்டத்தனமான தடை நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு மீறி, மிக எழுச்சியுடன் வெற்றிகரமாக அந்த மாநாடு நடத்தி முடிக்கப்பட்டது.

தமிழரின் அந்தக் கலாசார எழுச்சியை பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு, மாநாட்டின் முடிவில், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சர்வதேச அறிஞர்களை வழியனுப்ப நடந்த எழுச்சி மிகுந்த கோலாகல விழாவின் போது தன் கைவரிசையைக் காட்டி பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது.

அறிஞர்களை வழியனுப்ப யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் அதன் முன்றிலிலும் திரண்டிருந்த சுமார் ஐம்பதாயிரம் பொது மக்கள் மத்தியில், இதற்கென அநுராதபுரத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருந்த கலகமடக்கும் பொலிஸாரை ஏவி விட்டுத் தாக்குதல் நடத்தியது சிங்கள அரசு. குண்டாந்தடியடிப் பிரயோகம், அளவற்ற கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மின் கம்பிகள் அறுந்து விழுந்து, ஒன்பது பேர் அந்த இடத்திலேயே பலியாகினார்கள்.

இந்தக் கொடூரம் குறித்து விசாரணை செய்வதற்கு விசாரணை குழுக்கள் அமைக்கப்பட்டாலும், தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக் கொடூரங்கள் விடயத்தில், பொறுப்புக் கூறலும் நீதியும் நிலைநாட்டப்படுவதில்லை என்ற சிங்களத்தின் பொதுப் பண்பியல்புக்கு அமைய, இந்தக் கொடூரங்களின் விடயத்திலும் நீதி நிலை நாட்டப்படவில்லை; பொறுப்புக் கூறல் நடை முறைப் படுத்தப்படவில்லை.

## ஆனந்த தேரருக்கு பிரதமர் கௌரவிப்பு



கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்ட நாராஹேன்பிட ஸ்ரீ அபயாராம புராதன விகாராதிபதி வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு கௌரவமளிக்கும் விழா கடந்த சனிக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது நாரஹேன்பிட ஸ்ரீ அபயாராம புராதன விகாராதிபதி வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் கலந்து கொண்டார்.

இலங்கை வரலாற்றின் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசிய பிரச்சினைகள் மற்றும் அனர்த்தங்களின் மத்தியில் மஹாசங்கத்தினர் முன்னின்று செயற்பட்டமைக்கு வரலாறு சாட்சியளிக்கும். இந்நாட்டின் தேசிய பிரச்சினைகளின் போது முன்னின்று பெருந்தன்மையாக உழைத்த ஒருவராக நமது தேரர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். அந்த தேசிய பிரச்சினைகளின் மத்தியில் அவர் தயக்கமின்றி செயற்பட்டார். அதே போன்று தொழில் உரிமைக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டார். அது இறுதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் தொழிற்சங்க நடவடிக்கையாக மாற்றுவதற்கும், நேரடி கருத்துக்கள் ஊடாகப் போராடி வெற்றியுடன் நிறைவுசெய்வது தொடர்பில் நம் ஒவ்வொருவரும் பெருமையடைய வேண்டும். விசேடமாக தாதியர் சேவையின் முன்னேற்றம் உள்ளிட்ட இந்நாட்டின் சுகாதாரத் துறைக்கு அவரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மிகவும் முக்கியமானவை என்பதுடன், அது சாதகமான சுகாதார சேவைக்கு முக்கியமானதாக விளங்குகின்றது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதன்போது குறிப் பிட்டார்.

சிலுமின பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன இதன்போது வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் வாழ்க்கை தத்துவம் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

கொழும்பு பல்கலைக்கழக வேந்தர், நாராஹேன்பிட ஸ்ரீ அபயாராம புராதன விகாராதிபதி மற்றும் பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவருமான வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இதன்போது உரையாற்றினார்.

பல நிகழ்வுகளை இரத்து செய்தே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்நிகழ்வை சிறப்பிப்பதற்காக வருகைத்தந்துள்ளார். அன்று அபயாராம மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்ட போது பிரதமர் விகாரைக்கு வருகைத்தந்து எம்மைப் பற்றி விசாரித்தமையை ஒருபோதும் மறக்க முடியாது. நீங்கள் இன்று செய்துள்ள கௌரவிப்பிற்கும் எமது சங்கம் நன்றி தெரிவிக்க விரும்புகிறது என வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பில் திருட்டுத்தனமாக பால்மா விநியோக வர்த்தகர்கள்

இலங்கையில் சில மாதகாலமாக அங்கர் பால்மா வர்த்தகர்களால் திருட்டுத்தனமாக வியாபாரம் செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னதாக வாழைச்சேனை பிரதான வீதியில் இவ்வாறான ஒரு காட்சியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அந்த வகையில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பால் இல்லாமல் பெரும் சிரமப்பட்டு வரும் வேளையில் சில பணம் படைத்த முதலாளி வர்க்கத்தினர் அங்கர் பால்மா பக்கெட்டுகளைப் பதுக்கி வைத்துக்கொண்டு திருட்டுத்தனமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அங்கர் பால்மா பக்கெட் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வியாபார நிலையங்களில் காத்திருந்து பால் மா பக்கெட் இல்லாமல் வீடு திரும்பிச் செல்கின்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இந்தக் காலகட்டத்திலும்கூட பலம் பொருந்திய முதலாளி வர்க்கத்தினர் தங்களுக்கு ஏற்றாற்போல் பால்மாவைப் பதுக்கி வைத்து திருட்டுத்தனமாக வீதிகளில் வியாபாரம் செய்கின்றமை மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வியாபாரிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை மக்களுக்குச் செய்யும் ஒரு துரோகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## எரிவாயு கொள்கலன்களை ஏற்றிய ஊர்தியை துரத்திச் சென்ற டயனா



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக எரிவாயு கொள்கலன்களை ஏற்றிய சுமை ஊர்தியை துரத்திச் சென்ற சம்பவம் நடந்துள்ளது.

வீட்டில் சமையல் எரிவாயு முடிந்த பின்னர், எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்காக வீதிக்கு வந்தார் என அவர் கூறியுள்ளார். பத்தரமுல்லை பெலவத்தையில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் எரிவாயு இருப்பதாக டயனா கமகே கேள்விப்பட்டுள்ளார்.

அங்கு சென்ற போது, எரிவாயு முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் அத்துருகிரியவில் எரிவாயு கிடைப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து அவர் அத்துருகிரிய நோக்கிச் சென்ற போது, எரிவாயு கொள்கலன்களை ஏற்றிய பார ஊர்தி வீதியில் சென்றுள்ளதுடன் அதன் பின்னால் அதை துரத்திச் சென்ற அவர், ஒருவல பிரதேசத்தில் விற்பனை நிலையம் ஒன்றில் எரிவாயுவைக் கொள்வனவு செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக டயனா கமகே தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

# மஹிந்தானந்தவை உடன் பதவி விலக வலியுறுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி

## அதன்சார்பில் நளின் பண்டார வலியுறுத்து

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே உடனடியாக பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில்ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சீன கழிவுக் கப்பலுக்கு பணம் செலுத்தப்படுமா என நாம் கேட்ட போது இந்த அரசாங்கம் மண்ணைச் சாப்பிட்டுக் கொண்டு ஒரு சதமும் வழங்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறியது.

மஹிந்தானந்த உள்ளிட்ட ஆளும் தரப்பினர் தாய், தந்தையர் மீது ஆணையிட்டு சீன நிறுவனத்துக்குப் பணம் செலுத்தப்படாது எனக் கூறினர்.

எனினும் தற்பொழுது அரசாங்கத்தால் 69 லட்சம் அமெரிக்க டொலர் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மஹிந்தானந்தவிற்கு ஒரு துளியேனும் வெட்கம் இருந்தால், உடனடியாக பதவி விலகிச் செல்ல வேண்டும்.

மஹிந்தானந்த பதவி விலகிச் செல்ல வேண்டுமென்றே கோருகின்றோம் என நளின் பண்டார தெரிவித்துள்ளார்.



# சீன பசளை நிறுவனத்துக்கு நட்டஈடு வழங்கியதில் எந்தத்தவறும் இல்லை!

## மஹிந்தானந்த திட்டவட்டம்



சீன சேதன பசளை நிறுவனத்துக்கு நட்டஈடு வழங்கியதில் எவ்வித தவறும் கிடையாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் -

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்த விவகாரம் குறித்த இணக்கப்பாடு எட்டப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சீன நிறுவனம் 50 லட்சம் பிணையொன்றை வைத்து, உரிய தரத்தில் உரத்தை வழங்க இணங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த கப்பல் மீளவும் சீனாவிற்குத் திரும்பிச் சென்று சரியான முறையில் உரத்தைத் தயாரித்து, அதனை பரிசோதனை செய்து மீண்டும் இலங்கைக்கு உரம்கொண்டுவரப்படும்என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளின் போது அரசாங்கத்துக்கு எவ்வித நட்டமும் ஏற்படப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய நேரத்தில் எமக்கு உரம் கிடைக்காமையே ஒரே பிரச்சினையாகும் எனவும், நிதி நட்டம் ஏற்படவில்லை எனவும் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

# 2 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டது

2 கோடி ரூபா பெறுமதியான கேரளா கஞ்சாவை வானில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை பொத்துப்பிட்டிய பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் இருந்து களுத்துறை நோக்கி பயணித்த வான், பொத்துப்பிட்டிய சந்திக்கு அருகில் காலி வீதியில் நிறுத்தப்பட்ட போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து 63 கிலோ 200 கிராம் கேரளா கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியதுடன் வானையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் கைதான சந்தேகநபரிடம் இருந்து 7 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த கேரள கஞ்சா வெளிநாடுகளிலிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும், பாணந்துறை சலிது என்பவருக்குச் சொந்தமானது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு சென்ற இளைஞரைக் காணோம்!

வவுனியா - இலுப்பைக்குளம் பகுதியிலிருந்து கொழும்பிற்கு தொழில் நிமித்தம் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

வவுனியா - இலுப்பைக்குளம் பகுதியை சேர்ந்த குறித்த இளைஞர் கடந்த மூன்று மாதங்களாகக் கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரிந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள தனது வீட்டுக்குச் செல்வதாகத் தனது நண்பர்களிடம் கூறிவிட்டு புறப்பட்டுள்ளமையுடன், தனது வீட்டுக்கும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தான் வவுனியாவிற்கு வருவதாகவும் கூறியுள்ளார்.

எனினும் அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இரண்டு நாள்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டுக்கு வராத நிலையில், இதனையடுத்து அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாலுசுந்தரம் சுதர்சன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளமையுடன், அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0767700438 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தித் தெரியப்படுத்துமாறு அவர்களது குடும்பத்தினரால் கோரப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிச்சை எடுப்பவரை வறுமை நிலையில் உள்ளவர் கவனிப்பது போன்ற நிலையே தற்போது எமக்கு!

## விரக்தியில் அமைச்சர் கம்மன்பில



எரிபொருள் இறக்குமதியின் போது பாரிய டொலர் நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள நிலைமையில் மின்சார சபைக்குத் தொடர்ந்து கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

டொலர் பிரச்சினைக்கான தீர்வை மின்சாரத் துறை அமைச்சு காண வேண்டும். பிறிதொரு அமைச்சின் நிதி நெருக்கடியை எம்மால் தொடர்ந்து ஏற்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தேசிய எரிபொருள் விநியோகக் கட்டமைப்பிற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்யும் போது எதிர்கொண்டுள்ள டொலர் நெருக்கடியை வலுசக்தி துறை அமைச்சும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஒவ்வொரு முறையும் முகாமைத்துவம் செய்கின்றன.

3 நாள்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்வனவு செய்வதற்கு 2 கோடியே 50 லட்சம் டொலர் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. டொலர் திரட்டிக் கொள்வதற்கு பாரிய நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளோம்.

இலங்கை மின்சார சபைக்கு தொடர்ந்து எம்மால் கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது. மின்சார சபை தமக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலர் திரட்டிக் கொடுத்தால் தடையில்லாமல் எரிபொருளை வழங்க முடியும்.

மின்சாரத்துறை அமைச்சைக் காட்டிலும் வலுசக்தி துறை அமைச்சு பாரிய நிதி நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது.

டொலர் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் வலு சக்தி அமைச்சு மின்சாரத்துறை அமைச்சுக்கும் டொலர் திரட்டிக் கொடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

இது எவ்வாறாயின் பிச்சை எடுப்பவரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு வறுமை நிலைமையில் உள்ளவரிடம் ஒப்படைத்ததற்கு இணையான செயற்பாடாகக் காணப்படுகிறது.

மின்சாரத்துறை அமைச்சுக்கு எதிர்வரும் மாதம் முதல் கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது என்பதைக் கவலையுடன் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். பிறிதொரு அமைச்சின் நிதி நெருக்கடியை எம்மால் முகாமைத்துவம் செய்ய முடியாது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 247

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**635.கட்டமைப்புகள் பெரும் வாரி நிதி, தந்தனவா?**

விடுதலை புலிகள் தங்களின் ஏகோபித்த தலைமைக்காக தாம் வகுத்த பாதைகளில் அவற்றின் நியாயங்களில், பலசமயங்களில், மூத்தோரின் அனுபவங்களில் எழுந்த ஆதங்கங்களையோ, புத்திசாலிகளின் அறிவுறுத்தல்களையோ கேட்க விரும்பியதில்லை. பல பொது ஆய்வுக் கூட்டங்களுக்கு வந்து பங்குபற்றினாலும், அவர்களது பிரதிநிதி மௌனமாய் அவதானிப்பிலேயே இருப்பது தான் வழமை. கருத்துக்கள் தருவது குறைவு. பின்னர் தங்களுக்குள் ஆராய்ந்து முடிவு தருகிறோம் என்பது பதிலாக இருக்கும். அந்த அனுபவங்களில் புலி நின்று பின்னால் திரும்பிப் பாா்ப்பது வேட்டைகாரனைக் கவனிக்கவே தவிர, தனக்கு நன்றியுள்ளவனைக் கவனிக்க அல்ல என்ற உணர்வுகள் தான் ஏற்பட்டன. கூட்டாக முன்னெடுக்க கூடிய, பல வாழ் வாதார,



புனர்நிர்மாணக் கட்டமைப்புக்கள் எல்லாவற்றையும் தவிர்த்து, அவற்றைத் தமது திட்டங்களின் அடிப்படையில் தாங்களே நடத்தி கொண்டு வந்து, யுத்த காலங்களில் மக்களின் பாதுகாப்பு மட்டுமல்லாது மற்றைய பாரிய பொறுப்புகளையும் சுமந்து, பின்னர் இடைக்கால அரசை நிறுவி நடத்தினார்கள். அவற்றை அடுத்த பல ஆராய்வுகளும் விமர்சனங்களும் உண்டு. அவற்றில் சரி, பிழைகளை ஆராயும் நோக்கமோ அன்றில் விளக்கம் தர வேண்டும் என்ற எண்ணங்களோ இல்லை.

அவற்றுக்காக நடைபெற்றவையில் அறியாமைகளையோ, அனுபவக் குறைவில் கடந்த அரசியலின் விளைவுகளைக் கண்டு கொள்வதே எண்ணம். விடுதலை புலிகளின் இடைக்கால அரசு கிளிநொச்சியிலிருந்து இயங்கியதாலும், அவர்களின் ஆளுமை வட கிழக்கிலும் விரிந்திருந்ததாலும், 2009இல் அவர்கள் அழிக்கப்பட்டபோது, அவர்களுக்குக் கீழிருந்த கட்டமைப்புக்கள் யாவுமே அழிந்து, தமிழ் மக்களின் வாழ்வாதாரம், புனர்வாழ்வு எல்லாமே நிர்கதியாகி அவர்கள் கைவிடப்பட்ட மக்களாக வானத்தையே நோக்கி ஆண்டவனை நொந்தனர்.

எல்லாமே இழந்து விட்ட நிலையில், முன்னைய காலங்களில் இயங்கிய கட்டமைப்புகள் கூட, உடனடி நடவடிக்கைகளுக்காக இயங்க முடியாத நிலை. புலம்பெயர் அமைப்புக்களின் கூக்குரல்களாலும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தந்த கண்டனங்களாலுமே, சிறிதளவு உதவிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு ஊடாக வாழ்வாதாரத்துக்கு வந்து சேர்ந்தன.

1977ஆம் ஆண்டின் அட்டூழியங்களால், பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கும், புனர்வாழ்வுக்கும் எனத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம், காந்தீயம், யாழ்ப்பாண பிரஜைகள் குழு, கரித்தாஸ், செடேக் போன்ற நிறுவனங்களும், தனிப்பட்ட ரீதியில் புலம்பெயர் மக்களும் செல வழித்த தொகைகள் எவ்வளவு? அதை விட, தேசியம் தோற்க கூடாது, நிறுவப்பட வேண்டும் என விடுதலை போராளிகளுக்கு தரப்பட்டவை எவ்வளவு தொகைகள்?

அவற்றுக்காக ஆக்கப்பட்டு, பராமரிக்கப்பட்ட பண்ணைகளில் குடியேறிய மக்களின் இருப்பிடங்களாக எத்தனை இன்று உண்டு? மணல் ஆறு, வெலிஓயா ஆகியிருக்கின்றது. குருந்தூர் மலையில் புத்தர் அமர்ந்திருக்கின்றார். நெடுங்கேணி, முல்லைத்தீவு முக்கிய சந்தியில் புத்தர் குடியேற காணி எடுக்கப்படுகின்றது.

1977இல் இருந்து 1983 வரை தமிழ் கட்டமைப்புக்கள், வாழ்வாதாரத்துக்கும் புனர்வாழ்வுக்கும் தந்த நிழற் குடைகள் 1983 அட்டூழியங்களால், அழிக்கப்பட்டு, அந்த கலவரங்கள், தமிழ் மக்களின் பொருளாதாரத்தின் முதுகெலும்பையே உடைத்துதள்ளின. புலம்பெயர் அமைப்புகளும், முன்னரான கட்டமைப்புக்களும், சர்வதேச நிதி நிறுவனங்களின் அனுசரணையில் நீராகாரமாவது மக்களுக்கு கிடைக்க கூடிய வழிகளில் செயற்பட்டு கொண்டிருந்தன. வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளுக்கு எதிரான தாக்குதல்களுடன் போராட விடுதலை போராளிகள், பின்னர் விடுதலை புலிகளுக்கு கொடுக்கப்பட்டா அவர்கள் எடுத்து கொண்ட நிதிகள் எவ்வளவு?

இவற்றில் தொலைத்தவை தமிழ் மக்களின் விடுதலை வேட்கைக்கும் அதன் தீரத்துக்கும் முன்னால் தூசாகலாம். என்றாலும் பெற்ற பெறுபேறுகள் அவர்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன என்பனவும் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

**636.சுமந்திரனது குழு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் சந்திப்பை ஏற்படுத்திய பின், திணைக்களத்தின் ட்வீட்டுக்கு எதிராக கருத்தாக்கங்களும் எதிர்ப்புகளும் செய்து, அதில் மாற்றங்கள் கொண்டு வந்த புலம் பெயரின் இளைஞர் சமுதாயம், தற்சமயம் தாங்கள் சர்வதேச அமைப்புகளோடு இணைந்து தேசியத்தைக் கட்டியெழுப்பும் விருப்பில் முன்னேறுகின்றார்களே?**

தேசியத்தின் ஒவ்வொரு படியிலும் இளைய சந்ததிதான் அதை முன்னெடுத்து அதன் பாதையை நிறுவியது மட்டுமல்லாது, நகர்த்தியது. தமிழர் மாணவர் பேரவையாக தொடங்கி, இளைஞர் பேரவையாக வளர்ந்து, பின் விடுதலைக் குழுக்களாக மாறி, தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னெடுப்புகளுக்கே முட்டுக்கட்டை போட்டவர்கள். அவர்களில் இளமைத் துடிப்பு, அர்ப்பணிப்பு, ஆற்றல், தன்நம்பிக்கைகள் இருந்தன. இளம் கன்றுகள் பயமறியா. ஆனால் அனுபவங்களும் ஆழ்ந்த நோக்கும் குறைவாக இருந்ததால் தூர நோக்குகள் இன்றி அவையெல்லாம் காலத்துக்கு காலம் விளைந்தும் முடிவில் எவையும் வீடு வந்து சேரவில்லை.

புறப்படும் இந்தப் புதிய உலகில் இளைஞர்கள் முக்கியமாக, இவ்வரலாறுகளின் அனுபவங்களை, அவைதந்த பாடங்களை இரைமீட்டு கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்காவின் சிறிய இடுக்குகளால், சிறிது நீர் பொசியலாம். அது, சிறு ஊற்றாகவும், வடிகாலாகவும் பொசியலாம். வடிவம் பெறலாம். ஆனால், அது தேசியத்துக்குத்தான் ஓடுகிறது என எண்ணப்பட்டால் சிங்கள பெரும்பான்மை அதனை முளையிலேயே கிள்ளி விடும். அவற்றை அறிந்து கொள்ளவும், அவற்றில் எழுந்த அரசியலை உணர்ந்து கொள்ளவும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் உருவாக்கத்தைப் பார்க்க வேண்டும்.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழ் ஈழம் அமைக்க அங்கீகாரம் பெற்று வெற்றி வாகை சூடியிருந்தது. 1977ஆம் ஆண்டு கலவரங்களின் மத்தியில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அடைக்கலம் பெற்றிருந்த மக்கள் மத்தியில் நிதியம் உருவாக்கப்பட்டது. தமிழ் பரப்பில் எல்லா மட்டத் தரப்புகளினதும், ஆதரவும் அதன் பணிகளுக்கு இருந்தது. ஜனாதிபதி ஜே. ஆர். கூட சரஸ்வதி மண்டபத்துக்கு வந்த போது, தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தை, அரசின் சமூக சேவை திணைக்களத்துடன் பதிவதால், சில அரசியல் சலுகைகளுக்கு இலகுவாகும் என்ற விண்ணப்பத்தை தலைவர் கே.ஸி. நித்தியானந்தா விட்டிருந்தார். விண்ணப்பக் கோரிக்கையை அவர் தானே வாங்கி சென்றார். அவரது சிங்கள - பௌத்த பெரும்பான்மையின் நிர்வாகிகளின் அறிவுறுத்தலில், அதன் பெயரில் உள்ள 'தமிழ்', 'அகதிகள்' ('Tamil', 'Refugees') என்றவை மாற்றப்பட்டால் பதிவை முன்னெடுக்கலாம் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. எங்களிடையே அதற்கு இணக்கம் இல்லாமையாலும், தூர நோக்கிலும் சில ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதிலொன்று 1979இல் நான் லண்டன் சென்று, தமிழ் அகதிகளுக்கான பிரித்தானியாவின் மத்திய நிதியம் (Central British Fund For Tamil Refugees) என்ற அமைப்பை நிறுவியது. இடைக்காலப் பகுதியில், கலவரத்தின் காரணிகளையும், பொறுப்பானவர்களையும் அடையாளம் காணும் முகமாக சன்சோனி ஆணைக்குழு அமைக்கப்பட்டு தமிழ் மக்களுக்கான சமர்ப்பணம் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தால் தரப்பட்டிருந்தது. அதனால் அந்தப் பெயர் ஊடகங்களிலும், சந்து பொந்துகளிலும் வலுவாகத் தெரிந்திருந்தது. நெளிவு சுழிவுகளிடையே அதற்கு வங்கிக் கணக்கும் இருந்தது. மக்களின் நன்கொடைகளும் வந்து அவை பணிகளுக்குப் பாவிக்கவும்பட்டன. எந்த நேரத்திலும் அவற்றுக்குப் பாதுகாப்பு அதிகாரிகளால் இடைஞ்சல்கள் வரலாம் என்பதால் TRRO Ltd என அதனை ஒரு கம்பனியாகச் சட்டரீதியாக பதிந்து வைத்தோம். அகதிகள் நிதியத்தில் பணிப்பாளராகவும், TRRO Ltd இல் இயக்குநராகவும் ஆகவும் இயங்கினேன். சட்டத்தரணி கந்தசாமி அதன் ஸ்தாபகக் காரியதரிசியாக இருந்தார். பின்னர் அகதியாக லண்டனிற்கு வெளியேறியபோது பிரித்தானிய அமைப்பின் நிர்வாகத்தில் இருந்தார். ஆனால் இவை எல்லாவற்றிலும் பிதாமகனாகக் கருதப்பட்டு, பல சர்வதேச நிறுவனங்களின் நிதி வழங்கலுக்கு உந்து சக்தியாக விளங்கினார்.

**637.இந்தப் பின்னணியில் எதற்காக?**

தமிழ் மக்களை, மையப்படுத்தி செயல்பட விழையும் கட்டமைப்புகள்



கந்தசாமி

சிங்கள - பௌத்த ஏகாதிபத்தியத்தின் பார்வைகளில் பெறும் ஆட்சேபனைகளை அறிந்து செயல்பட வேண்டும். மற்றது, இந்தப் பிதாமகன் கந்தசாமி, யாழ்ப்பாணத்தில் 19 ஜூன் மாதம் 1988 இல் விடுதலைப் போராளிகளால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதின் அரசியலைப் புரிந்து கொள்ள இந்த சிறிய பின்னணியாவது தெரிந்திருக்க வேண்டும். அதன் ஒரு பாகமாக, நிதியம் சன்சோனி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பணம் செய்ய, புத்திசாலிகளுடன் நகல்கள் தயாரித்து, அவற்றை விடுதலைக் கூட்டணியினருக்கும், மற்ற அரசியல் பரப்புகளுக்கும் பார்வைக்கு அனுப்பிய போது ஏற்பட்ட கருத்து மோதல்களையும், விரிசல்களையும் பார்க்க வேண்டும்.

1979இல் தனித்தமிழீழத்திற்கு கூட்டணி அங்கீகாரம் பெற்றிருந்தது. 1977 இனக் கலவரம் வெடித்தது. அதைத் தொடர்ந்து பலர், முக்கியமாக அனேகமான தமிழ் மக்கள், நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர். சமர்ப்பணத்தில் ஈடுபட்டிருந்த புத்திஜீவிகளில் சிலர் தேர்தலிலே மக்கள் பெருமளவில் தனித் தமிழீழத்துக்கு வாக்களித்திருந்தாலும், மக்களுக்கு அடி மனத்தில் அந்த எண்ணம் ஆழமாக ஊறியிருக்கின்றதா, கானல் தேசத்தின் மாயையில் மண்ணில் நின்று, தேசியத்தைக் கட்டமைக்க விரும்புகிறார்களா என்ற ஆய்வும் கணக்கெடுப்பும் நடத்த விரும்பினார்கள். (09ஆம் பக்கம்...)

# கொழும்பு அரசியலில் ஏற்படவுள்ள அதிரடி மாற்றம்; சந்திரிகா தலைமையில் உருவாகும் புதிய கூட்டணி!



எதிர்வரும் நாள்களில் கொழும்பு அரசியலில் அதிரடி மாற்றமொன்று ஏற்படவுள்ளதாகவும்,சந்திரிகா அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் அரசிலுள்ள அமைச்சர்கள் பலர் இணையவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் அவரது தந்தை பண்டாரநாயக்கவின் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த,இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் மொட்டு நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ன யாப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், சந்திரிகா அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் அரசிலுள்ள பல அமைச்சர் இணையக்கூடுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பொருள்களின் விலை மேலும் எகிறலாம்!

எதிர்காலத்தில் உணவுப் பொருள்களின் விலை தொடர்ந்தும் எகிறும் என்று சந்தைப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக உர நெருக்கடி காரணமாக உள்ளூர் விவசாயப் பொருள்களின் விலையும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது உணவுப் பணவீக்கத்தை அதிகரிக்கும் காரணியாகும்.

தற்போது வரையிலும் உர பிரச்சினை காரணமாக நெல் உற்பத்தி மற்றும் மரக்கறி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என விவசாய வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கமைய, உணவுப் பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 22.1 சதவீதமாக உயர்ந்துள்ளது, முந்தைய மாதத்தில் 17.5 சதவீதமாக இருந்தது. அது முன்னரை விட தற்போது வரையில் வேகமாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் மரக்கறி உற்பத்தி குறைவதால் சந்தைக்கு வரக்கூடிய மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலை உயர்வதற்கு வாய்ப்புள்ளதால் உணவுப் பணவீக்கம் மேலும் உயரும் அபாயம் உள்ளதாகவும் சந்தைப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## மைத்திரிக்கு எதிராக அதிரடி நடவடிக்கை எடுக்க தயாராகின்றது கோட்டாவின் அரசு!

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை விமர்சித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமா செய்தாலும் அடுத்த சில வருடங்களுக்கு அரசாங்கம் தொடரலாம் என அரசாங்கம் மேற்கொண்ட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தாம் விரும்பிய எந்த தீர்மானத்தையும் எடுக்கும் வாய்ப்புகள் இருப்பதாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பிரதான பொறுப்புகூறும் நபராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயர் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் என்ற சந்தேகம் காரணமாக பெருந்தோட்ட கட்சிகள் மற்றும் கிழக்குக் கட்சிகளுடன் அரசாங்கம்



கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் இடம்பெறும் என கூறப்பட்ட அமைச்சரவை மாற்றமும் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பெருந்தோட்டத்துறையில் உள்ள கட்சியொன்றுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவி வழங்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிகரெட்டுக்கான புதிய விலை சூத்திரம் அமைச்சரவை அனுமதிக்கு சமர்ப்பிப்பு!

விலைச் சூத்திரமொன்றை அறிமுகம் செய்து அதன் ஊடாக சிகரெட் விலை அதிகரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வார இறுதி பத்திரிகையொன்று இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

சிகரெட்டுக்கான வரி குறித்த புதிய விலை சூத்திரம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனைத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புகையிலை மற்றும் அல்ஹகோல் உற்பத்தி குறித்த தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் இது தொடர்பான யோசனை அமைச்ரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் இந்த விலை சூத்திரம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தற்போதைய பண வீக்கத்தின் அடிப்படையில் சிகெரட் விலைகள் உயர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிகரெட்டுக்கான ஒட்டுமொத்த வரியையும் நுகர்வோர் சுமக்கும் வகையில் விலைப்பொறிமுறைமை அறிமுகம் செய்யப்பட உள்ளது.



## முன்னாள் கிரிக்கெட் வீரருக்கு எதிராக வழக்குத் தொடரத் தயாராகிறார் ரணில்

முன்னாள் கிரிக்கெட் வீரரும், முன்னணி போட்டி மத்தியஸ்தருமான ரொஸான் மஹானாமவிற்கு எதிராக வழக்குத் தொடர நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஹானம அண்மையில் தனது சுயசரிதை நூலை வெளியிட்டிருந்தார்.

இந்த நூலில் உள்ளடக்கப்பட்டிருந்த சில விடயங்கள் தம்மை அவதூறு செய்யும் வகையில் அமைந்துள்ளன என ரணில் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் மஹானாமவிற்கு சட்டத்தரணி ஊடாக நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்பி வைக்க உள்ளார் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் பிரதமராகப் பதவி வகித்த ரணில், அப்போதைய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான ஹேமக அமரசூரியவை சர்வதேச கிரிக்கெட் பேரவை கூட்டத்துக்கு அனுப்பாது, கிரிக்கெட் சபையில் அங்கம் வகிக்காத திலங்க சுமதிபாலவை அனுப்ப நடவடிக்கை எடுத்தார் என மஹானாம தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். தாம் இவ்வாறு செயற்படவில்லை எனவும், இந்தக் கருத்து பிழையானது எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## யாழில் விபத்து; ஒருவர் காயம்!

யாழ். நாவற்குழி பகுதியில் கனகர வாகனம் ஒன்றும் காரும் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் சனிக்கிழமை இரவு நாவற்குழி சந்திக்கும் நாவற்குழி பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காரில் பயணித்தவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

வைகோ வாகனத்தை ஏற்றிச் சென்ற பார ஊர்தியை முந்திச் செல்வதற்கு கார் முற்பட்ட போதே விபத்து நிகழ்ந்துள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் காரில் ஒருவர் மட்டுமே பயணித்தார் எனவும் வாகனங்கள் இரண்டும் யாழ்ப்பாணம் நோக்கிய திசையில் பயணித்தன எனவும் தெரிவித்துள்ளனர்.

## கனியவள கூட்டுத்தாபனத்தால் மின்சார சபைக்கு நெருக்கடிகள்

நாட்டின் பல பகுதிகளில் ஒரு மணிநேரம் மின் விநியோகம் தடைப்பட்டிருந்த நிலையில் அதற்கான காரணம் வெளியாகியுள்ளது.

கனியவள கூட்டுத்தாபனத்தால், இலங்கை மின்சார சபைக்கு, உராய்வு எண்ணெய் வழங்கப்படாமை காரணமாகவே நாட்டின் பல பாகங்களில் மின் விநியோகத்தடை ஏற்படுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபைக்கு சனிக்கிழமை 5 ஆயிரம் மெட்ரிக் தொன் உராய்வு எண்ணெயை கனியவள கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளது.

இதேவேளை,சப்புகஸ்கந்த மற்றும் துறைமுகம் என்பனவற்றில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு இந்த உராய்வு எண்ணெய் வழங்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.




# நுட்பியல் அவத்தை

## தொழில்நுட்ப போக்கு - 2022
## செயற்கை நுண்ணறிவு எல்லா இடங்களிலும்




ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
virtualict22@gmail.com


04

நுட்பியல் அவத்தையால் எதிர்காலம் எப்பொழுதும் வியப்பானதாக ஆச்சரிய மூட்டுவதாக அமைகிறது. நாம் தாமதமாகவே அதன் பின்னே ஓடுகிறோம். மனிதனது கற்பனை கடந்து மனிதனால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் பயணிக்கிறது. அதாவது எந்த நேரமும் ஒவ்வொரு கணப்பொழுதிலும் விஞ்ஞானிகள் மற்றும் பொறியியளாளர்கள் எதிர்கால தொழில்நுட்பத்தையும் அதன்வழி நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும் பெரிய மற்றும் சிறிய வழிகளில் மறுவடிவமைப்பு செய்கிறார்கள். அதை நாம் உணர்ந்து கொள்ளமுடிவதில்லை, ஏனென்றால் நாம் அதை அனுபவித்து வருகிறோம், ஆனால் கடந்த அரை நூற்றாண்டில் முன்னேற்ற விகிதம் அசாதாரணமானது - கணினி, மருத்துவம், தகவல் தொடர்பு மற்றும் பொருள் அறிவியல் போன்ற பரந்த துறைகளில் உலகம் வேகமாக மாற்றமடைகிறது ஒருவகையில் செல்திசைதெரியாது தடுமாறுகிறது எனலாம். இதனை கவிஞர் முருகையனின் கவிவரிகள் அற்புதமாகக் குறிப்பிடுகின்றன.

**நானும் நீரும் இவர்களும் உவர்களும்**
**உடலசைக்காமலே காலம் தள்ளலாம்**
**சிந்தனை செய்தும் ஆய்வகள் பண்ணியும்**
**மூளையைக்கசக்கவும் வேண்டியதில்லை**
**சுப்றீம் கணனியே ஆய்வுகள் நடத்தும்**
**அணுக்கரு ஆற்றலே அனைத்தையும் இயக்கும்**
**உழைப்பும் களைப்பும் ஒழிந்து போய்விட்டால்**
**அற்புதம் அற்புதம் ஆன்மீகப் பெருவளம்**
**இருவினை ஒப்பும் இலேசாய்க் கிடைக்கும்**
**மலபரிபாகமும் மறுகணம் நிறைவுறும். (எல்லாம் சரிவரும், 1998)**

எங்களின் எதிர்காலம் தொழில்நுட்ப நிபுணரின் தொலைநோக்கில் தான் உள்ளது அது எம்மிடமில்லை என்பதை புரிந்துகொண்டாக வேண்டும். அவர்களின் கண்ணாடிகளை வைத்து, நமது உலகத்தை மாற்றும் சில அற்புதமான எதிர்கால தொழில்நுட்பங்களின் பட்டியலைப் பார்க்கலாம்.

இதுவே நுட்பியல் அவத்தையின் அற்புதம் பயோனிக் மனிதர்கள் முதல் காலநிலை நெருக்கடியை சரிசெய்யக்கூடிய தொழில்நுட்பம் வரை அனைத்தும் நுட்பியல் அவத்தையால் முடிகிறது. அதைப் புரிந்து கொண்டாக வேண்டும்.

தற்போது எமக்கு எரிவாயு தட்டுப்பாடு முதல் பால்மா அரிசி என எல்லாம் தட்டுப்பாடுகளும் உள்ளன. பால்மா தட்டுப்பாட்டை சமாளிக்க தற்போது ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்ட பால் பொருள்கள் பற்றி சிந்திக்கப்படுகிறது.

ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட 'இறைச்சி' பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள், அதே போன்று பாலமா தயாரிப்பு பற்றியும் ஆராச்சிகள் நடக்கின்றன. ஆனால் ஓர் ஆய்வகத்தில் செல்களை வளர்த்து இதனை உருவாக்க முயற்சிக்கிறார்கள். உலகெங்கிலும் அதிகரித்து வரும் பயோடெக் நிறுவனங்கள் பால், ஐஸ்கிரீம், பாலாடைக் கட்டி மற்றும் முட்டை உள்ளிட்ட ஆய்வகத்தால் தயாரிக்கப்பட்ட பால் பற்றி ஆய்வு செய்கின்றன. இந்தவகை பால் தொழில்நுட்பம்; சுற்றுச்சூழலுக்கு உகந்தது அல்ல என்றும் குறிப்பிடப்படுகின்றது. இது உலகின் நான்கு சதவீத கார்பன் உமிழ்வுகளுக்கு பொறுப்பாகும் என்று குறிப்பிடப்படுகின்றது. அதாவது உலகில் விமானப் பயணம் மற்றும் கப்பல் போக்குவரத்தை விட இதனால் ஏற்படும் பாதிப்பு அதிகமாக உள்ளது என்று குறிப்பிடப்படகின்றது. ஆய்வகத்தில் இறைச்சியை உருவாக்குவதைவிட ஒப்பீட்டளவில் ஆய்வகத்தில் பால் உருவாக்குவது உண்மையில் கடினம் அல்ல. ஸ்டெம் செல்களிலிருந்து இதை வளர்ப்பதற்குப் பதிலாக, பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் பால் புரதங்களான மோர் மற்றும் கேசீன் ஆகியவற்றை உற்பத்தி செய்ய முயல்கின்றனர். தற்போது சில தயாரிப்புகள் ஏற்கனவே அமெரிக்காவில் சந்தையில் உள்ளன, வழக்கமான பசும்பாலின் சுவை உணர்வையும் ஊட்டச்சத்து நன்மைகளையும் இனப்பெருக்கம் செய்வதில் இதில் கவனம் செலுத்தப்படுகின்றது. இதையும் தாண்டி, பீட்சாவின் மேல் நன்றாக உருகும், மற்ற பாலாடைக்கட்டிகள் மற்றும் ஐஸ்கிரீம் போன்ற ஆய்வகங்களில் தயாரிக்கப்பட்டனவற்றை உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

### மனிதனின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்கும் டிஜிட்டல் ஸ்கேனர்

எமக்கு நோய்ஏற்பட்டால் வைத்தியரை நாடி நோயைக்கண்டுபிடித்து வைத்தியம் செய்யுமாறு கோருகின்றோம். ஆனால் இனி அவ்வாறு செய்யத் தேவையில்லை ஒருவிபத்தோ அல்லது நோயோ எற்பட்டால் ஒரு ஸ்கேனருக்குள்ளால் நீங்கள் சென்றால் போதும் உங்கள் உடலில் உள்ள அனைத்து குறைபாடுகளையும் கணித்து தேவையான சிகிச்சையைப் பரிந்துரைக்க ஸ்கானர் வந்துவிட்டது. இது ஆரோக்கிய விளைவுகளை மேம்படுத்துவதோடு, அதே நேரத்தில் மருத்துவர்களின் சுமையையும் குறைக்கும் என்று குறிப்பிடுகிறார்கள். இதற்கான ஸ்கேனரை அமெரிக்க நிறுவனம் உருவாக்கியுள்ளது,

ஒரு மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான பயோமார்க்ஸர்களை (biomarkers) இது அளவிடக் கூடியதாகும். இது உடலின் ஹார்மோன் அளவுகள் முதல் கல்லீரலில் உருவாகும் கொழுப்பு வரை அழற்சியின் குறிப்பான்கள் அல்லது பல புற்றுநோய்களின் குறிப்பான்கள் வரை அனைத்தையும் அளவிடுகிறது இது மருத்துவத்தின் புதிய சகாப்தத்துக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறார்கள். இதில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை மருத்துவர்களுக்கு எந்த நோயாளிகளை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்பதை முதன்மைப்படுத்த உதவுவது மட்டுமல் லாமல், நோயைக் கண்டறிவதற்கான அதிநவீன வழிகளை உருவாக்கவும் உதவும் என்கிறார்கள்.

### இறந்த உடல்களிலிருந்து உரம் தயாரித்தல்

ஒருவர் இறந்த பின்னர் அவரைத் தகனம் செய்வதால் சராசரி தகனம் 400 கிலோ கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்தில் வெளியிடப்படுவதாக



கணிக்கப்படுகிறது. இதனால் இறந்த உடலை பயனுள்ள உரமாக மாற்றும் தொழில்நுட்பம் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாநிலத்தில், இவ்வாறு இறந்த மனிதர்களின் உடலிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. இறந்த உடல்களை, மரப்பட்டை, மண், வைக்கோல் மற்றும் இயற்கையான சிதைவை ஊக்குவிக்கும் இதர சேர்மங்களுடன் அறைகளில் போடப்படுகின்றன. 30 நாள்களுக்குள், அதில் போடப்பட்ட உடல் ஒரு தோட்டத்திற்குரிய உரமாக அதாவது மண்ணாக மாற்றப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில், மறைந்த நடிகர் லூக் பெர்ரி, கோயோ என்ற ஸ்டார்ட் - அப் வடிவமைத்த பெஸ்போக் 'காளான் உடையில்' அடக்கம் செய்யப்பட்டார். காளான்கள் மற்றும் பிற நுண்ணுயிரிகளால் உருவாக்கப்பட்ட உடையைப்பயன்படுத்தியும் உரம் தயாரிக்கப்படுகிறது. இந்த உடையில் அதிலுள்ள தொழில்நுட்பம் உடல் சிதைவதற்கு உதவுகின்றன மற்றும் ஒரு உடல் பொதுவாக சிதைவடையும் போது உணரப்படும் நச்சுகளை நடுநிலையாக்குகின்றன.

ஆனால் எமது பண்பாட்டில் மரணத்திற்குப் பின் உடல்களை இவ்வாறு பயன்படுத்தவது என்பது கற்பனை கடந்த விடயம். இங்கு உடல்களை அப்புறப்படுத்துவதற்கான மாற்று வழிகள் புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்பதைப்புரிந்து கொள்ள வேண்டும். அவை சமூக அங்கீகாரத்துக்கும் மதிப்புக்குமுரியவையாகும்.

மனித உடலை பயனுள்ள உரமாக மாற்றுவதற்கு வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது அழுத்தப்பட்ட அறையில் ஆறு மணிநேர செயல்முறையில் உடலை அதன் இரசாயன கூறுகளாக உடைப்பதை உள்ளடக்குகிறது. இது பல அமெரிக்க மாநிலங்களில் சட்டப்பூர்வமானதாகவுள்ளது.

### செயற்கைக் கண்கள்

செயற்கைக் கண்கள்(பயோனிக் கண்கள்) பல தசாப்தங்களாக அறிவியல் புனைகதைகளின் முக்கிய அம்சமாக இருந்து வந்தது. இப்போது நிஜ உலகில் சாத்தியமாகியிருக்கிறது. பல்வேறு வகையான பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு பார்வையை மீட்டெடுக்கும் தொழில்நுட்பமாக செயற்கைக் கண்கள் (பயோனிக் கண்கள்) சந்தைக்கு வருகின்றன.

ஜனவரி 2021 இல், இஸ்ரேலிய அறுவை சிகிச்சை நிபுணர்கள் உலகின் முதல் செயற்கைக் கண்கள் (பயோனிக் கண்கள்) பார்வையற்ற, 78 வயது முதியவருக்கு பொருத்தினர். இங்கு செயற்கைக் கண்கள் (பயோனிக் கண்கள்) இயற்கையாகவே மனித திசுக்களுடன் இணைகிறது.

அதேபோல் 2020 ஆம் ஆண்டில், பெல்ஜிய விஞ்ஞானிகள் ஸ்மார்ட் காண்டாக்ட் லென்ஸ்கள் பொருத்தப்பட்ட ஒரு செயற்கை கருவிழியை உருவாக்கினர், இது பல பார்வைக் கோளாறுகளை சரிசெய்கிறது. ஆஸ்திரேலியாவில் உள்ள மொன்டாஷ் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், பயனர்கள் கேமரா பொருத்தப்பட்ட ஒரு ஜோடி கண்ணாடிகளை அணியும் ஓர் அமைப்பிற்கான சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.




இது நேரடியாக உள்வைப்புக்கு தரவை அனுப்புகிறது, இது மூளையின் மேற்பரப்பில் அமர்ந்து பயனருக்கு பார்வையின் அடிப்படை உணர்வை அளிக்கிறது.

# அரசியல் சூழ்ச்சியில் இறங்கியிராவிட்டால் இன்றும் மைத்திரிதான் நாட்டின் ஜனாதிபதி



அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. 20 மூலம் அது நீக்கப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள அவல நிலையை மக்கள் இன்று உணர ஆரம்பித்துள்ளனர். இந்த உண்மையைதான் மைத்திரி இன்று கதைக்கின்றார். ஆனால் 52 நாள்கள் அரசுக்கு அவர் அரசியல் சூழ்ச்சி செய்திருக்காவிட்டால், இன்றும் அவரே ஜனாதிபதி.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ் ணன் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய பிரதமருக்கு அனுப்படவுள்ள கூட்டு ஆவணத்தில் நாம் கையொப்பமிடாவிட்டாலும், தமிழ்த் தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். அவர்களின் நடவடிக்கைக்கு எதிராக நாம் நிற்கமாட்டோம் என்றார் அவர்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசுக்குள், அரசியல் ரீதியிலும் தற்போது நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளார். மறுபுறத்தில் மைத்திரிபால சிறிசேனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். எனவே, அரசு வெகு விரைவில் கவிழும் என்பதையே நாட்டில் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் மூலம் உணர முடிகின்றது.

எதிர்காலத்தில் புதிய கூட்டணிகள் உருவாகலாம். புதிய பயணம் பற்றி மைத்திரிபால சிறிசேனவும் கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் நாமும் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம். தேர்தலை மட்டும் எதிர்ப்பார்த்து வருபவன் தலைவன் கிடையாது, நாளைய சமுதாதாயம் பற்றிச் சிந்திப்பவனே உண்மையான தலைவன். அவ்வாறானவர்களுக்கே நாம் ஆதரவு வழங்க வேண் டும்.

அதேவேளை, தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தன. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவதற்கே ஆரம்பத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்பின்னர் சமஷ்டி, சுயநிர்ணயம் உள்ளிட்ட விடயங்களும் உள்வாங்கப்பட்டன. இதனால் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம். அதற்கு தடையாகவோ - எதிராகவோ நிற்கமாட்டோம். - என்றார்.

# சஜித் நயினாதீவு விஜயம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன. 10

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரு மான சஜித் பிரேமதாஸ நேற்றைய தினம் யாழ்ப் பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நயினாதீவுக்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸா நாகவிகாரைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு விகாராதிபதியிடம் ஆசிகளை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது, சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜெலனி பிரேமதாஸா, மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு அமைப்பாளர் உமாச்சந்திர பிரகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட வற்றில் ஒரு சின்ன கணக்கெடுப்பு, யாழ்ப்பாணத்தின் முக்கியமான ரயில் நிலையங்களிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் பெறப்பட்ட பயணச்சீட்டுக்கள் எங்கு செல் வதற்கு வாங்கப்பட்டன என்பது பற்றியது. பெறப்பட்ட தகவல்களின் ஆய்வு முக்கியமான ரயில் நிலையங்களிலிருந்து வாங்கப்பட்ட பயணச்சீட்டுகளில் சராசரி 85 - 90 வீதம் கொழும்புக்கு வாங்கப்பட்டிருந்தன. 6 வீதம் மலையகத்திற்கும் பெறப்பட்டிருந்தன. மிகுதி 9 வீதம் பல இடங்களுக்கும். முக்கியமாக வவுனியா, கிளிநொச்சிப் பிரதேசங்களுக்கு 6 வீதம் தன்னும் இல்லை. மேல் பெறப்பட்ட தகவல்கள், வருடா வருடம் அதுதான் பய ணச்சீட்டு விற்பனைகளின் கணக்கெடுப்பு என்றும், மக்களின், முக்கியமாக இளைஞர்களின் நோக்கு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி மற்ற தமிழ் பகுதிகளில் வாழ்வாதாரம் தேடுவதல்ல, நாட்டை விட்டு நீங்கி விட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியது.

இவற்றின் அடிப்படைகளில், புத்திஜீவிகள் சமர்ப்பணத்தின் அடிப்படைகளில், தமிழ் மக்கள், பிரிந்து செல்லும் கோரிக்கைக்கு ஆதரவானவர்கள் அல்லர் என சுதந்திரத்துக்கு பினனைய அரசியல் கோரிக்கைகளையும் எடுத்துக் காட்டி நகல் தயாரித்தார்கள்.

கூட்டணியினர், இளைஞர் பேரவை, அச்சமயம் தொடக்கப்பட்டு இலைமறைவாக இயங்கிய விடுதலை போராளிகள், முக்கியமாக விடுதலை புலிகள், தமிழர் புனர்வாழ்வு நிதியத்தின் இந்த நிலைப்பாட்டை, ஒரு காட்டிக் கொடுப்பாக எதிர்த்தார்கள். புத்திஜீவிகளின் வற்புறுத்தலில் நிதியம், அரசியல் சுலோகங்களை விட்டு, யதார்த்தமான ரீதியில் பயணிக்க வேண்டும் என்று பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது.

(வளரும்)

## இன்று முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவிடம் கோரியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, தாம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் ஆகிய நடவடிக்கைகளுக்கு இடையில் ஏற்படுகின்ற இடைவெளியை நிவர்த்தி செய்துக்கொள்ள முடியாமையினாலேயே, மின்சார சபை இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டிய காலப் பகுதி மற்றும் நேரத்தை இலங்கை மின்சார சபையே தீர்மானிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மின்சார பாவனையாளர்கள், கடந்த ஓரிரு வருடங்களாக தமக்கான மின்சார கட்டணத்தை செலுத்தத் தவறியுள்ளமையே, மின் வெட்டை அமுல்படுத்தக் காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சீன வெளிவிவகார அமைச்சர் கோட்டா, மஹிந்தவுடன் பேச்சு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு நேற்றிரவு இலங்கை வந்த சீன வெளி விவகார அமைச்சர் வாங் யீ நேற்று இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்தார்.

சீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் அடங்கிய விசேட விமானம் ஒன்று சனி இரவு இலங்கை வந்தடைந்தது.

அவரது குழுவினரை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வரவேற்றார்.

சீன வெளிவிவகார அமைச்சர் நேற்று இரவு கொழும்பு துறைமுக நகருக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருந்தார்.

இதன்போது துறைமுக நகரத்தில் பல திறப்பு வைபவங்களில் அவர் கலந்துகொள்ள இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நாட்டின் உயர் அதிகாரிகள் சிலரையும் அவர் சந்திக்க உள்ளார்.

இதேவேளை, சீன - இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65வது ஆண்டு நினைவு தினம் இங்கு நினைவு கூரப்படுகிறது.

சீன வெளிவிவகார அமைச்சர் தனது இலங்கை விஜயத்தின் போது பல முதலீட்டு யோசனைகளை முன்வைக்கவுள்ளார் எனவுன் தெரிவிக்கப்படுகின்றது.

## சீனா எமது உயிர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ, சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்க் யீ ஆகியோர் இதன்போது இலகுரக படகு முற்றத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையை பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவைத்தனர்.

இந்த நடைபாதையில் பொதுமக்கள் நடைபயிற்சியில் ஈடுபடக் கூடியதுடன், காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலக அலுவலகத்திற்கு முன்னால் இதற்கான தற்காலிக நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

நடைபாதையின் நிறைவில் வளைவான வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உலோக தொங்கு பாலம் வரை பொதுமக்கள் பயணிக்கக்கூடியதுடன், தினமும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 6 மணி வரை அங்கு தங்கியிருக்கலாம்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைய இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 'இலங்கை - சீன நட்புறவு படகோட்டப் போட்டி' இதன் ஓர் அங்கமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## சகல உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வெளியிடப்பட வேண் டும்.

ஆனால், இங்கிலாந்தில் தங்கியுள்ள் இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்கவிற்கு கொவிட் - 19 தொற்றுறுதியாகியுள்ளமையினால் அவரால் தேர்தலை பிற்போடுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அதிகார விடயங்களை அவரிடமிருந்து நீக்கி,வேறு அமைச்சரிடம் ஒப்படைத்து, அவரின் மூலம் இந்த வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதியுடன் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிவுக்கு வருகின்றது. அதையடுத்துத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் ஓராண்டு பிற்போட்டப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை இப்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்ச ரினால்தான் கூடியது ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே பிறபோட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர்களுடன் அவர்களது 4 மற்றும் 9 மாதக் குழந்தைகளும் காரில் பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி மற்றும் மதவுவைத்தகுளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈரற்பெரியகுளம் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சுகந் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## சீனாவின் ஒத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான வாங் யீவுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை வரவேற்ற ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க உறவுகளை நினைவுகூர்ந்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காலத்தில் சீனாவிடமிருந்து கிடைத்த பொருள் மற்றும் நிதி உதவிகளுக்காக, சீன வெளிவிவகார அமைச்சருக்கு ஜனாதிபதி, இலங்கை அரசினதும் மக்களினதும் சார்பில் நன்றியைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மீட்டிப்பார்த்த வாங் யீ , மீண்டும் இலங்கைக்கு வருகைதரக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்ததுடன், நெருக்கமான நண்பன் என்ற வகையில் சீனாவின் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கொரோனாத் தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, இலங்கைக்கு சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க சீன அரசு தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவுக்கும் ஜனாதிபதி சீன அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கை திறக்கப்பட்டுள்ளது. சீன சுற்றுலாப் பயணிகளை உயிர்க் குமிழிக்குள் மட்டுப்படுத்தி இலங்கைக்கு வரவழைப்பதற்கு உதவுமாறு வாங் யீயிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

கொரோனாத் தொற்று நோய்க்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தினால் அது நாட்டுக்குப் பெரும் நிவாரணமாக அமையும் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அதேபோன்று, சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின்போது சலுகை வர்த்தகக் கடன் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால், கைத்தொழிற்றுறையைத் தடையின்றி சீராக நடத்த முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளின் போலித்தனம் அம்பலமாகியுள்ளது




நிவாரணம் வழங்கும் வரை ஏசினார்கள். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளின் போலித்தனம் அம்பலமாகியுள்ளது. ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவத்தகம நீர் வழங்கல் திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

நாங்கள் ஒரு நியாயமான அரசாங்கம். நாங்கள் எங்கும் மத, இன பிளவுகளை விதைக்கும் அரசாங்கம் அல்ல. இன, மத பிளவுகளை விதைப்பதாக எதிர்க் கட்சிகள் எம்மை அவதூறு செய்கின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் மற்றும் மலாய் என அனைத்து சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளார்.

முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது தடுப்பூசிகளை வெற்றிகரமாக ஏற்றி, கொவிட் தொற்றுநோயிலிருந்து மக்களைக் காப்பாற்றிய தலைவராக வரலாற்றில் இடம் பெறுவார். நம் அண்டை நாட்டில் மக்கள் நின்ற நிலையில் இறப்பதைக் காண்கிறோம்.

எங்கள் மக்கள் ஒக்ஸிஜன் இல்லாமல் வைத்தியசாலைகளில் இறந்துவிடுவார்கள், படுக்கைகள் இல்லாமல் மக்கள் இறந்துவிடுவார்கள், மேலும் கொவிட் தொற்றுநோய் காரணமாக இலங்கையில் சுமார் 2 லட்சம் மக்கள் மரணிப்பார்கள் என்று எங்கள் எதிர்க்கட்சி கணித்துக் கூறியது. தடுப்பூசி கொண்டு வந்த போது, தடுப்பூசி போட வேண்டாம் என்று கூறினார்கள்.

தடுப்பூசி போடப்பட்டவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குள் இறந்துவிடுவார்கள் என்றார்கள். தடுப்பூசிகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சிகள் மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியது. இப்படி மக்களுக்கு சொன்ன தலைவர்கள் இரகசியமாகச் சென்று தடுப்பூசி போட்டார்கள்.

ஆனால் அவர்களுக்கு வாக்களித்த மக்களிடம் நிவாரணம் பெற்றுத் தருமாறு கேட்கவில்லை. கொவிட் தொற்றுநோய் நிலைமையின் போது, தங்களுக்கு வாக்களித்த மக்களை முடிந்த வரை தெருக்களில் இறங்கி, கொவிட் தொற்றைப் பரப்பி , அவர்களின் சடலங்களின் மீது அரசியல் அதிகாரத்தைப் பெற எதிர்க்கட்சி செயற்பட்டது.

இந்த நாட்டை அபிவிருத்தியின் உச்சத்துக்குக் கொண்டு செல்வோம். நாடு வங்குரோத்து அடைய இடமளிக்க மாட்டோம். டொலர்கள் இல்லாமல் நாடு வங்குரோத்து ஆகும் என்றும், 15 ஆம் திகதிக்குள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றும் எதிர்க்கட்சி எதிர்பார்க்கிறது. இவை தற்காலிகமான பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகள் நம்மை மட்டுமல்ல, உலகின் மற்ற நாடுகளையும் பாதித்துள்ளது.

ஊழலற்ற இந்த நாட்டை ஆட்சி செய்ய ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி நாட்டைக் கட்டிஎழுப்பிவருகிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் எதிர்க்கட்சிகள் கிறீஸ் பிசாசுகளை உருவாக்கினார்கள்.

நாடாளுமன்றம் தனது அதிகாரத்தை இழந்துள்ளது . ஆளும் தரப்பில் இருந்து எதிர் தரப்புக்கு 30 - 40 பேர் தாவப் போகிறார்கள். இப்படி ஒவ்வொரு பிசாசுகளை எதிரணி உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் கனவு அரண்மனைகளுக்குள் சிலர் அமர்ந்து எம்மீது சேறு பூசுகிறார்கள்.

நாம் அவர்களை அவ்வளவாக பொருட்படுத்துவதில்லை. இந்த நாட்டை அபிவிருத்தி செய்வோம் என இந்த நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். அந்த வாக்குறுதியை நாங்கள் காப்பாற்றுகிறோம். உலகம் முழுவதையும் பாதித்த கொவிட் தொற்றுநோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தினோம். வெற்றிகரமான தடுப்பூசிகள் மூலம் நாம் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளை விட முன்னணியில் இருக்கிறோம்.

தயக்கத்துடன் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டியதாயிற்று. எங்களில் யாருக்கும் அதில் விருப்பமில்லை. புத்தாண்டில் மக்களுக்கு நிவாரணம் வழங்கினோம். எதிர்வரும் தேர்தலை இலக்கு வைத்து நாங்கள் இவற்றைச் செய்தோம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

நிவாரணம் வழங்கப்படும் வரை, வாக்குறுதி அளிக்கப்பட்ட நிவாரணம் எங்கே என்று வினாவினார்கள். நிவாரணம் வழங்கப்படும் போது பியகமவில் உள்ள தொழிற்சாலையில் அச்சடித்து வழங்குவதாக விமர்சிக்கிறார்கள். மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் போது எதிர்க்கட்சிகளின் உள்ளத்தில் உள்ள கபட எண்ணம் வெளியே வருகிறது. எதிர்க்கட்சிகள் உங்களை வீழ்த்த முயன்றாலும் மக்கள் வீழ்ந்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். - எனத் தெரிவித்தார்.

## ஊடகவியலாளர்களுக்குப் பல அச்சுறுத்தல்கள் உள்ள காலப்பகுதியில்தான் நாம் வாழ்கிறோம்!

### லசந்தவின் நினைவு நிகழ்வில் சாணக்கியன் கருத்து

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு பல அச்சுறுத்தல் இருக்கும் காலப்பகுதியில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிகம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் லசந்த விக்கிரமதுங்கவின் 12 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபியில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கொழும்பிலே இருக்கும் பல ஊடகங்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்களை அரசு தமது வியாபாரிகளை விட்டு அனைத்தையும் கைப்பற்றும் சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் பல சிரேஷ்ட ஊடகவியலாள்களுக்குத் தொலைபேசி அழைப்புக்களை விடுத்து நீங்கள் இவ்வாறான வேலைகளைத் தொடர்ச்சியாக செய்வீர்களானால் உங்களை வேலையில் இருந்து நீக்கவேண்டிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

2022 ஆம் ஆண்டிலே ஜனாதிபதியாக இருக்கும் அவர்தான் அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்தவர். அவர் 2009 ஆம் ஆண்டு லசந்த விக்கிரமசிங்க கொல்லப்பட்டதன் பிறகு கொடுத்த பேட்டி ஒன்றைப் பார்த்திருந்தேன். அப்போது யார் இந்த லசந்த என்று கேட்டிருந்தார்.

எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை. ஆனால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய இருக்கின்றேன் என்றவர் தான் இன்று நாட்டிலே ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருக்காக வழக்கு பேசிய அலி சப்ரி தான் இந்த நாட்டிலே நீதி அமைச்சராக இருக்கின்றார்.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு பல அச்சுறுத்தல் இருக்கும் காலப்பகுதியில் - அப்படியான காலப்பகுதியில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். லசந்த மட்டுமல்லா் 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதேவேளை பொலிஸாரால் லசந்த கொலை தொடார்பாக வழக்குத் தொடரப்படவில்லை.



இருந்தபோதும் நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அந்த வழக்கை ஆரம்பித்தாலும் அதை திருப்திகரமான முடிவை எந்த அரசாங்கமாக இருந்தாலும் பெற முடியவில்லை என்பது கவலையான விடயம்.

எனவே, இனிவரும் காலங்களிலாவது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். கொலை செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தாலோ, நீதிமன்றத்தாலோ தண்டனை வழங்காவிட்டாலும் இறைவன் தண்டணை வழங்குவான். - எனத் தெரிவித்தார்.

## தங்கத்தின் விலை சடுதியாக குறைவு



உலக சந்தையில் தங்கத்தின் விலை தற்போது குறைந்துள்ளது.

ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை தற்போது 1789.60 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது.

அதன்படி, கடந்த ஒரு வாரத்தில் தங்கத்தின் விலை சுமார் இரண்டு சதவீதம் குறைந்துள்ளது, இது இரண்டு மாதங்களில் இல்லாத குறைந்த விலையாகும்.

## ஆடைகளை திருடியவர் நையப்புடைக்கப்பட்டார்

வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையங்களில் ஆடைகளைத் திருடினார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி சந்தேகநபர் தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றில் ஆடைகளைத் திருடியபோது அவரை சுற்றிவளைத்த இளைஞர்கள் அவரது கைகளைக் கட்டி நையப்புடைத்ததுடன், பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்படை மற்றும் மீனவ சமூகங்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

நாட்டின் தென்கிழக்கு பகுதியில் எதிர்வரும் சில நாள்களுக்கு குறைந்த வளிமண்டல குழப்ப நிலை உருவாகும் சாத்தியம் காணப்படுவதால், கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளன.

எனவே, காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறையின் சில பிரதேசங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2022இல் வெளியிடப்பெற்றது.